**தலைப்பு 404 – கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இராஜாங்க அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூறநிதிறுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும்

வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்வி மறுசீரமைப்பு, திறந்த பல்கலைக்கழகம் மற்றும் தொலைக்கல்வி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சு, புதிய அமைச்சு ஒன்றென்பதினாள் முன்னைய ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 முற்பணங்கள் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா 295,906 ஆக இருந்த முற்பணங்கள் கணக்கின் மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டு முதல் நிதி நிலைமை தொடர்பான கூற்றில் அரச உத்தியோகத்தர்களின் முற்பணங்கள் பீ கணக்கு மீதியில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக | வருட இறுதியில் முற்பணங்கள் கணக்கின் மீதி நிதி நிலைமை தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். |

### 1.6.2 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 214 ஆவது நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. | இந்த காலவரையறைக்குள் கடப்பாடுகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டிய வகையில் செயற்பாடுகள் இடம்பெறவில்லை என்பதுடன் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பதிவேடொன்று பேணுதல் தேவையில்லை என்பதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இராஜாங்க அமைச்சின் நோக்கம் மற்றும் குறிக்கோளை நிறைவேற்றிக் கொள்வதற்காக செலவு விடயம் 12 க்கு உரிய ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாட்டில் சேமிப்பு ரூபா 6,171,757 ஆக காணப்பட்டதுடன் அது தேறிய ஏற்பாட்டில் நூற்றுக்கு 25 இல் இருந்து நூற்றுக்கு 100 வரையான வீச்சில் காணப்பட்டது. | பதவியணியினர், வாகனங்கள், அலுவலக வசதிகள் ஆகியவற்றை தேவைப்பாட்டின் குறைந்த அளவில் பாவனைக்குட்படுத்தி இராஜாங்க அமைச்சின் நடவடிக்கைகள் பேணப்பட்டு வருவதுடன் Covid-19 நிலைமையின் பொருட்டு பயிற்சி பாடநெறிகள் உட்பட வேலைகளை செயற்படுத்த முடியாதிருத்தல் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருப்பதற்கு காரணமானதாக | அமைச்சின் நோக்கம் மற்றும் இலக்குகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |
| (ஆ) நிதிப்பிரமாணம் 66 இன் பிரகாரம் வகை மாற்றப்பட்ட ஏற்பாட்டில் 05 சந்தர்ப்பங்களிலே மொத்தம் ரூபா 3,599,760 ஆன ஏற்பாடுகள் சேமிப்பாக காணப்பட்டதுடன் அது நூற்றுக்கு 30 இல் இருந்து நூற்றுக்கு 100 வரையான வீச்சில் காணப்பட்டது. | பதவியணியினர், வாகனங்கள், அலுவலக வசதிகள் ஆகியவற்றை தேவைப்பாட்டின் குறைந்த அளவில் பாவனைக்குட்படுத்தி இராஜாங்க அமைச்சின் நடவடிக்கைகள் பேணப்பட்டு வருவதுடன் Covid-19 நிலைமையின் பொருட்டு பயிற்சி பாடநெறிகள் உட்பட வேலைகளை செயற்படுத்த முடியாதிருத்தல் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டிருப்பதற்கு காரணமானதாக | அமைச்சின் நோக்கம் மற்றும் இலக்குகள் நிறைவேற்றிக் கொள்வதற்கு வருடாந்தம் ஒதுக்கப்படுகின்ற ஏற்பாடுகளை உச்ச அளவில் பயன்படுத்திக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டுக்காக மொத்தம் ரூபா 87,909 ஆன 04 பொறுப்புக்கள், பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இறுதி நிதிக் கூற்றுக்களை தயாரிக்கும் சந்தர்ப்பங்களிலே இந்த பொறுப்புக்கள் தொடர்பாக அறிந்திருக்கவில்லை என்பதாக. | கணக்கீட்டு வருடத்திற்கு உரிய பொறுப்புக்கள் பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப் படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (i) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756(6) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை 2021 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 யூலை 31 ஆந் திகதியிலும் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு உரிய அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகம் | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப் பட்டிருக்கவில்லை | 2021 ஆம் ஆண்டிற்கான சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக | சுற்றுநிருபத்தின் பிரகாரம் மனித வள அபிவிருத்தித் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 திட்டமிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்குரிய கணக்கீட்டு காலப்பகுதிக்கான செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | புதிதாக நிறுவப்பட்டஇந்த அமைச்சிற்கு நிரந்தர பதவியணியினரொன்று இல்லாமை மற்றும் நிரந்தர அலுவலக வளாகமொன்று இல்லாததன் காரணமாக 2020 ஆம் ஆண்டிற்கு உரிய காலப்பகுதிக்குரிய செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கவில்லை என்பதாக | பொது நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தயாரிக்கப்பட்டுள்ளது. | சுற்றுநிருபத்தில் காட்டப்பட்டுள்ள வழிகாட்டலின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்திக்கான நோக்கத்தை அடைதல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் வருட நிகழ்ச்சி நிரல் தொடர்பாக இராஜாங்க அமைச்சினால் புரிந்து கொண்டு, இராஜாங்க அமைச்சுக்கு உரியதாக்கிக் கொள்ள முடியுமான இலக்கு மற்றும் நோக்கத்தை அடையாளங் கண்டிருக்கவில்லை. | தேசிய கல்வி நிறுவன கற்கை நெறி திருத்தம் மற்றும் அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றதாக | அமைச்சுக்கு உரிய நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கு மற்றும் நோக்கத்தை அடையாளங் கண்டிருக்க வேண்டும். |

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளக கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளக கணக்காய்வு அலகொன்றை நிறுவியிருக்கவில்லை. | உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |